REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ THONE: 55690

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 8உ வியாழன் (24—11—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 9உ வெள்ளி (25—11—55) [இதழ் 139

சீரமைப்புக் குழுவினருக்கு ரூ. 10 இலட்சம் செலவு!

மாநில சீரமைப்புக் குழுவினருக்காக சென்ற செப்டம்பர் திங்கள் இறுதியுடன் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 10,06 669—5—3 என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குழுவினருக்குச் சம்பளமாக மொத்தம் ரூ 6 32,328 கொடுக்கப்பட்டதென்றும், பிரயாணச் செலவுகளுக்காகவும், தினப்படியாகவும் ரு 1,48,773—7—0 கொடுக்கப்பட்டதென்றும், மற்றச் செலவுகளுக்கு ரூ. 2,05,567—14—3 செலவிடப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னையில் 14,500 பேர் வேலை நிறுத்தம்

'அச்சுறுத்தலுக்கு அஞ்சோம்—அடிபணியோம்!'

'அறைகூவலை ஏற்போம்-எதிர்த்து நிற்போம்'

சென்னை சட்ட சபையில் பி. டி- இராசன் முழக்கம்

"திரு—கொச்சி முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன் விடுத்துள்ளதைப் போன்ற எச்சரிக்கைகளாலும், பயமுறுத்தல்களாலும் தமிழர்கள் பதுங்கிவிட மாட்டார்கள்; அவர்களுடைய மிரட்டல்களால் அச்சப்பட்டுவிட மாட்டார்கள்; தமிழர்கள், தங்களை இப்போது எதிர்நோக்கியிருக்கிற இப்பிரச்சினையில் மிகுந்த உன்னிப்புடன் இருக்கவேண்டும்; இல்லையெனில், அவர்கள், மீட்கப்பட முடியாத பெரும் நஷ்டத்திற்கு ஆளாக்கப்படுவர்."

என்று, திரு. பி டி இராசன் அவர்கள், சென்னை சட்ட சபையில், நடைபெற்ற மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் பற்றிய விவாதத்தின்போது, தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது:—

"தேவிகுளம், பீர்மேடு பகுதிகளிலுள்ள தேயிலை, ஏலக்காய் தோட்டங்களில் பெரும் பகுதியையும் தமிழர்களே உரிமையாகக் கொண்டிருக்கின்றனர் கடந்த ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் அதிகமாகத் தமிழர்கள்தான், அப்பகுதிகளின் வளப்பத்திற்காக என்று தங்களாலான உடலுழைப்பையும் தந்திருக்கின்றனர். அப்பகுதிகளில் வாழும் மக்களும் தமிழர்களே தான்; அவர்களுடைய பெயர்கள் கூடத் தமிழ்ப் பெயர்கள்தான். அவர்கள், நிரந்தரமற்ற குடிகள் என்று எந்த வகையிலும் கருதப்பட முடியாதவர்கள்; முன்னாள் முதலமைச்சர் பட்டம் தாணு பிள்ளை கூட, இப்பகுதிகளில் காலனிக் குடியிருப்பு முறையைக் கொண்டுவந்து விடுவதற்காக எவ்வளவோ முயன்றார்; எனினும், பலன் ஏற்பட முடியாமல் போய்விட்டது. நேற்றும் அவர் ஒரு எச்சரிக்கையை தமிழர்களுக்கு விடுத்திருக்கிறார்; ஆனால் இப்படிப்பட்ட எச்சரிக்கைகளையும் பயமுறுத்தல்களையும் கூறிவிடுவது சுலபம்தான். எனினும், தமிழர்கள் இவற்றால் பதுங்கிக்கொள்ளப்போவது இல்லை. தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை மறைத்துவிடுவதின் மூலம், திரு-கொச்சி மாநிலம் தனது சிறு பிரச்சினைகளை வேண்டுமானால் தவிர்த்துக் கொள்ளலாம்.

"திரு-கொச்சி மாநிலம், பெரியாறு தண்ணீரை தமிழ் நாட்டுக்குத் தந்தது மறுக்கப்படக்கூடாததுதான்; ஆனால், அதற்குப் பதிலாகத் தமிழ்நாடும் அவர்களுடைய பற்றாக்குறைகளின்போது தேவையான அளவு உணவு தானியங்களை விநியோகித்துத்தான் இருக்கிறது; ஆனால், இன்றோ, திரு-கொச்சி மாநிலம், தனக்குத் தேவைப்படாதிருக்கிற ஆற்று நீரைக் கூட சென்னை மாநிலத்திற்குத் தர மறுக்கிறது. இப்படிப்பட்ட அவர்களது மன நிலைதான், தமிழர்களையும் எச்சரிக்கையுடன் இருக்கும்படி தூண்டியிருக்கிறது.

"தமிழ் மாநிலம், இதுவரையிலும், தன்னை விட்டுப் பிற மாநிலங்கள் பிரிந்து போய்விட வேண்டும் என்று ஆசைப்படவில்லை; ஆந்திரம் பிரிந்ததுகூட, ஆந்திரர்கள் விரும்பினதால்தான் நடைபெற்றது. ஆனால், தமிழ் நாட்டுக்குச் சொந்தமான சென்னை நகரை விட்டுச்செல்ல கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதுபோலவேதான், மலையாள மாநிலப் பகுதிகள் பிரிந்து செல்ல வேண்டுமானால் செல்லட்டும்; அதே நேரத்தில், தமிழ் நாட்டுக்குச் சேர வேண்டிய பகுதிகளைச் சேர்த்துவிட்டுப் பிரியட்டும். அதற்குப் பதிலாக, மலையாள அமைச்சர்கள், எச்சரிக்கைகளிலும் பயமுறுத்தல்களிலும் மட்டுமே ஈடுபட்டு வருகின்றனர். எனவே தமிழர்களும் அதற்காகப் பயந்துவிடக் கூடாது. இதுவரையிலும் தமிழர்கள் தொல்லைகளை அனுபவித்தார்கள் என்றால், அதற்குக்கூட, அவர்களுடைய சொந்தத் தவறுகளும், கவலையற்ற தன்மையும்தான் காரணமாகும்."

மேலும் அவர், எல்லையோரப் பகுதிகளிலுள்ள தகராறுகள் குறித்துப் பேசுகையில், எல்லையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் தாங்கள் எந்த மாநிலத்தில் இணைந்து வாழவேண்டுமென்பதைத் தாங்களே முடிவு செய்து கொள்ளும் உரிமையும், சுதந்திரமும் அளிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தொழில் அமைச்சர் தலையிட்டும் முடிவு காண முடியவில்லை?

பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள முடிவுகள்

சென்னை, நவ. 24—

சம்பள உயர்வு, பஞ்சப் படி, இவைபோன்ற இதர வசதிகளைச் செய்து தருவதுபற்றி சென்னை பக்கிங்காம்—கர்நாடிக் ஆலைத் தொழிலாளர்கள்—நிர்வாகிகள் ஆகியோருக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முறிந்ததையொட்டி, சென்ற 19-ந் தேதி முதலே மேற்கொள்ளப்பட இருந்த வேலை நிறுத்தம், தகராறில் மீண்டும் சமரசம் காணப் பேச்சு வார்த்தைகள் நடத்தும்படி மாநில தொழில் அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருந்த யோசனைப்படி நிறுத்தப்பட்டு, மறுபடியும் நடைபெற்ற பேச்சு வார்த்தையிலும் முறிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, பி. அண்ட். சி. ஆலைத் தொழிலாளர் 14,500 பேரும், இன்று காலை $6\frac{1}{2}$ மணி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

'காலவரையறையின்றி, வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது' என்ற இந்த முடிவு, நேற்று மாலை சென்னை கான்ரான்ஸ்மித்நகர் மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் தொழிலாளர் பொதுக் கூட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்டது.

இன்று காலை துவங்கப்பட்ட வேலைநிறுத்தத்தில் வெகு அமைதியான சூழ்நிலை நிலவிவருகிறது. தொழிலாளர்கள் அனைவரும்வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர்.

மற்றும் இவர்களுடன், பாதுகாப்புத் தொழில் புரியும் ஊழியர்களும், நியமனப்புப் படையினரும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

எவ்வித அசம்பாவித நிகழ்ச்சிகளும் இன்று முற்பகல் வரையிலும் நடைபெறவில்லை.

அமைதியாகவே வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கூட, ஆலையைச் சுற்றிலும் ஏராளமான

(4-ம் பக்கம் பார்க்க)

நாடகத் தடைச் சட்ட நடைமுறை விதிகள்

சென்னை, நவ. 23—

1954-ம் ஆண்டு சென்னை நாடகச் சட்டத்தின் கீழ், 1955-ம் ஆண்டு சென்னை நாடக நடைமுறை விதிகளை சென்னை சர்க்கார் பிறப்பித்துள்ளனர்.

நாடகத்தைத் தடை செய்வதற்கு முன்பு, 'அதை ஏன் தடை செய்யக் கூடாது' என்பதற்கு, 7 நாட்களுக்குள் பதில் கூறுவதற்கு நாடகம் நடத்துபவர்களுக்கு அவகாசம் தரவும், சர்க்கார் 'நோட்டீஸ்' பிறப்பிக்கவும் இவ்விதிகளின் கீழ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

1954—55-ம் ஆண்டில், சர்க்காருக்குச் சொந்தமான சிந்திரி எரு-இரசாயனங்கள் லிமிடெட் மொத்த இலாபம் ரூ. 3,96 கோடி சம்பாதித்தது; இது முன் வருட இலாபத் தொகையைவிட ரூ. 1·25 கோடி அதிகம்.

இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம்

இருவர் நீக்கப்பட்டதை எதிர்த்துப் பட்டினிப் போராட்டம்

அதிகாரிகளும் கலந்துகொள்வரென அறிவிப்பு

ஜாம்ஷெட்பூர், நவ. 23—

டாடா நகர் இரயில்வே நிலையத்தில், இரயில்வே தொழிலாளர்கள், இரண்டு 'பாயின்ட்ஸ்மென்'களை அநியாயமாக நிர்வாகத்தினர் வேலையினின்று நீக்கியதை எதிர்த்து, திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

பிரயாணிகள், சாமான் போக்குவரத்து வண்டிகளனைத்தையும் அவர்கள் நிறுத்தியிருக்கின்றனர்.

ஆனால் இன்று, அத்திடீர் வேலை நிறுத்தம், மோசமான நிலை பெற்று வருவதாகவும், இரயில் எஞ்சினியரிங் துறைத் தொழிலாளர்களும், இந்த வேலை நிறுத்தக்காரர்களுடன் சேர்ந்துகொண்டுவிட்டனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவர்களைத் தவிர 'கார்டுகள்', வண்டி ஓட்டிச் செல்லும் அதிகாரிகள் ஆகியோர் தாங்கள் வேலை நிறுத்தத்தில் மற்றையோருடன் கலந்துகொள்ளப் போவதாகவும் 'பயமுறுத்தி'யிருக்கின்றனராம்.

நியாயமற்ற முறையில் இருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிக்கும் முறையில் உள்ளூர் இரயில்வே மென்ஸ் யூனியனின் துணைச்செயலாளர் நேற்று முதல் பட்டினிப் போர் தொடுத்திருக்கிறார். அவருடைய உடல் நிலை குறித்து பரிசோதித்த மருத்துவர் அவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவித்திருக்கிறார்.

சர்க்கரை ஆலையில் வேலைநிறுத்தம்

15,000 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்

500 பேர் கைது செய்யப்பட்டு காவலில் உள்ளனர்

ஐதராபாத், நவ. 22—

இத்திங்கள் 9-ந் தேதி முதல் இங்குள்ள நைசாம் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த சோஷலிஸ்டுக் கட்சி சார்பிலுள்ள தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதையொட்டி நகரில் விதிக்கப்பட்டிருக்கும் தடையுத்தரவை மீறினார்கள் என்ற குற்றத்திற்காக, சுமார் 500 சங்க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்திய தேசிய டிரேட் யூனியன் காங்கிரசால் நடத்தப்பட்டு வரும் பிரதிநிதித்துவம் பெற்றிராத அமைப்பினை, நிர்வாகிகள் ஏற்றுக்கொண்டதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே, மேற்படி யூனியனைச் சேர்ந்த சுமார் 15,000 தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 200 பேர், ஏறகனவே, அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் என்று கூறப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள 15,000 தொழிலாளர்களில் 3500 பேர்தான் நைசாம் சர்க்கரைத் தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் என்றும், மற்றையோர் அனைவரும் அந்த ஆலையை ஒட்டிய பிறபண்ணைகளில் பணியாற்றுபவர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சிந்திரி உர உற்பத்திசாலையில் உற்பத்தி பெருகியவுடன் அம்மோனியம் சல்பேட் விற்பனை விலை மேலும் குறைக்கப்பட்டது இதன் விலை 1952—53-ல் டன்னுக்கு ரூ 350 ஆக இருந்தது படிப்படியாககுறைந்து ரூ 270ஆகிவிட்டது.

7,000 செம்புத் தொழிலாளர் திடீர் வேலை நிறுத்தம்!

மருத்துவச் சிகிச்சையினரின் கவனக் குறைவால் தொழிலாளி ஒருவர் இறந்ததற்கு எதிர்ப்பு

ஜாம்ஷெட்பூர், நவ 23—

ஜாம்ஷெட்பூரை அடுத்த கட்சிலா எனுமிடத்தில், பிரிட்டிஷாருக்குச்சொந்தமான 'இந்தியன் காப்பர் கார்ப்பொரேஷனை'ச் சேர்ந்த சுமார் 7,000 தொழிலாளர்கள், நேற்று முழுவதும் திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

'பிட்டர்' வேலையிலிருந்த ஒருவருக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சையில், மருத்துவர்கள் வெகுக்குறைவாக நடந்துகொண்டதால், நேற்று அவர், நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவ மனையில் இறந்துவிட்டதையொட்டி, அதிகாரிகளின் கவனக் குறைவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனராம்.

இன்று காலை மீண்டும் வேலைகள் தொடர்ந்து அமைதியாக நடைபெறுகின்றன என்றும் செய்திக் குறிப்புக்கள் அறிவிக்கின்றன.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—11—'55 வியாழன்

ஒத்துழைப்புக்கு இடமுண்டு!

ஆங்கில ஏகாதிபத்தியம் மெள்ள மெள்ள சிறுகச் சிறுக இந்தியத் துணைக் கண்டத்தை உருவாக்கிற்று. தனக்குக் கீழ்ப்படிந்து எடுபிடியாக இருக்க மனமொப்பிய நாட்டரசுகளிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு இப்பெரும் நிலப்பரப்பில் ஒரு தனித்த ஆட்சியை நிறுவி நிலைபெறச் செய்தது.

டெல்லியிலுள்ள பேராட்சிக்கு குமரிமுனையிலுள்ள கோமகனும் அடிபணிந்து கிடக்கவேண்டும் என்ற ஒரே கருத்தின்மீதுதான் ஆங்கில ஏகாதிபத்தியம் செயல்பட்டது. அதற்கு ஒத்து இருக்கும் வகையில் மாகாணங்களை அமைத்துக்கொண்டது.

நிர்வாகம் இலகுவாக நடைபெறவேண்டும் என்ற அடிப்படையிலும் ஏகாதிபத்தியம், மாகாணங்களைப் பிரித்து அமைத்தது. குறிப்பிட்ட ஒரு மொழியினரின் மொழி, பண்பாடு, கலை, தொழில் ஆகிய எதன் வளர்ச்சியையும் ஏகாதிபத்தியம் ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை.

குறிப்பிட்ட ஒரு பகுதியை, அப்பகுதியில் வழங்கப்பட்டு வரும் மொழியினரைக் கொண்டே அப்பகுதியின் ஆட்சிப் பொறுப்பை நிர்வகிக்க ஏகாதிபத்தியம் அனுமதிக்காததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஒரு மொழி பேசும் மக்களிடம் வளரும் ஒற்றுமையிலும் கட்டுப்பாட்டிலும், தனது அழிவுக்குரிய ஆபத்து இருப்பதாக ஆங்கில ஏகாதிபத்தியம் கருதியது. அதன் விளைவாக மொழி வழி மண்டலங்கள் உருவாவதைத் தடுத்தும், கெடுத்தும் விட்டது ஏகாதிபத்தியம்.

பல மொழி பேசும் மக்களைக் கொண்ட மாகாணங்களாக உருவாக்கினால்தான், ஒரு மொழியினரை மற்றொரு மொழியினர் பகைத்துக்கொண்டும், வெறுத்துக்கொண்டும், தங்களுடைய பக்க பலத்தை ஒவ்வொரு மொழியினரும் நம்பி வாழ்வது இலகுவாகும என்பது வெள்ளைப் பரங்கியரின் கருத்தாகும்; இறந்த காலம் இதை மெய்ப்பித்தும் இருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் இன்றைய நிலை இதுவல்ல; அரசியலில் பெரு மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது.

மொழிவழி மாகாண அமைப்பு காங்கிரஸ் கட்சியின் செல்லப்பிள்ளையாக ஒருகாலத்தில் இருந்தது; ஆனால், இன்றோ, அக்கருத்து எட்டிக்காயாகி விட்டது காங்கிரஸ் கட்சிக்கு.

மொழிவழி மாகாண அமைப்பு ஒன்றினாலேயே இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் கூட்டு குலைந்துவிடாது. அரசியல் கூட்டு சிதைவதும் அழியாததும் வடவரின் நடவடிக்கையைப் பொறுத்துள்ள விஷயமாகும்.

இன்று போகிற போக்கிலேயே வடவர் போய்க்கொண்டு இருப்பார்களானால் இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் கூட்டில் கீறல் விழத்தான் விழும். அப்படி கீறல் விழுந்துவிடுவதாலும் இந்தியத் துணைக் கண்டத்தின் எந்தப் பகுதிக்கும் ஈடுசெய்ய முடியாத பெருநஷ்டம் ஏற்பட்டு விடாது.

மாகாண புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் மீது சென்னை சட்ட சபையில் நடைபெற்ற விவாதத்தில்பங்கு கொண்ட மக்கள் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு மலையாள உறுப்பினர், மொழிவழி மாநில அமைப்பினால் தென்னாட்டின் மீது வடநாட்டிற்கு உள்ள பிடி மேலும் கடுமையாகிவிடும் எனக் குறிப்பிட்டிருக்கிறார். இருக்கும் நிலை பற்றி அவர் கூறியுள்ள விளக்கத்தில் உண்மை இருக்கிறதே அல்லாது, அவர் கூறும் காரணத்தில் உண்மை இருப்பதாகக் கொள்வதற்கில்லை.

இப்பொழுதுள்ள மாகாண அமைப்பிலேயேதான் வடநாட்டின் ஆதிக்கம் தென்னாட்டின் மீது தாங்க முடியாதத் தன்மையில் இருந்து வருகிறது. அந்த ஆதிக்கத்தை அறுத்தெறிய அல்லது கட்டுப்படுத்த இந்த உறுப்பினர் போன்றவர்கள் இதுவரை செய்திருப்பது என்ன? ஒன்றுமில்லை என்றே சொல்லி விடலாம்!

தென்னாட்டை வடநாடு ஆட்டிப் படைக்கிறது என்ற உண்மையை மலையாள உறுப்பினர் மனப்பூர்வமாக நம்புவதானால், அந்த ஆதிக்கத்திலிருந்து நமது திராவிடத்தை விடுவிக்க அவர் முன்வர வேண்டும். அப்படி அவர் முயற்சிப்பதற்கு இப்பொழுதுள்ள மாநில அமைப்பு எந்த வகையிலும் குறுக்கே நின்று தடுப்பதாக இருக்கவில்லை.

இதுபோன்றே, வடவர் ஆதிக்கத்திலிருந்து விடுபட, மொழிவழி மாகாண ஏற்பாடும் தடையாக ஒருக்காலும் இருக்காது. திரு-கொச்சியில் உள்ள தேவிகுளம், பீர்மேடு போன்ற தமிழர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட தமிழ்ப் பகுதிகள் சென்னை——இல்லை தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டு விடுவதாலும், இருந்துவரும் வடவர் ஆதிக்கம தானாகக் குலைந்துவிடப் போவது கிடையாது. தேவிகுளமும்பீர்மேடும்திரு-கொச்சியுடன் எப்பொழுதும் இணைந்திருந்தாலும் திராவிடத்தின் மீது வடநாடு செலுத்திவரும் ஆதிக்கத்தில் தானாக அணுவளவும் ஆட்டம் கொடுத்துவிடப் போவது கிடையாது.

உத்திரப் பிரதேசம் இப்பொழுது இருப்பது போலவே இருந்தாலும், அல்லது மாகாணப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுப்படி பெரிதாக்கப்பட்டாலும், தென்னாட்டின் மீது வடநாடு செலுத்தி வரும் ஆதிக்க வாய்ப்பில் கூடுதலோ குறைவோ, மலையாள உறுப்பினர் எடுத்துக் காட்டுவது போல, ஏற்பட்டுவிடாது. எப்பொழுதும் இருக்கும் வாய்ப்பு ஒரு பலமுடையதாகத்தான் இருக்கப் போகிறது.

தேவிகுளமும்,பீர்மேடும் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டு விடுவதால் மலையாள மொழியினருக்கும் தமிழர்களுக்கும் பிணக்கேற்பட போதிய நியாயம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்பொழுதும் வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து முறியடிக்க தமிழர்களும் மலையாளிகளும் ஒன்று சேர்ந்தே முயற்சித்தாக வேண்டும்.

வடநாட்டு ஆதிக்கம் முறியடிக்கப்பட்டு, உலக அரங்கில் திராவிடம் தனக்குரிய இடத்தைப் பெறுவதில் மலையாள உறுப்பினருக்கு உண்மையில் பற்றும், பரிவும் இருக்குமானால், மொழி வழி மாநில அமைப்பை அவர் எதிர்க்கத் தேவையே இல்லை. அதற்குத் தடையாக மொழி வழி மாநில ஏற்பாடு இருக்கவே இல்லை.

தேவிகுளம்-பீர்மேடு தமிழ்ப் பகுதிகளை திரு—கொச்சியுடன் நிரந்தரமாக இருக்கப் பார்த்துக் கொள்வதற்காக மலையாள உறுப்பினர், வடவர் ஆதிக்கம் பற்றி பேசுகிறாரோ என எவரும் ஐயம் கொள்ளவே செய்வர். எதற்காக அம்மலையாள உறுப்பினர் வடவர் ஆதிக்கம் பற்றி குறிப்பிட்டிருந்த போதிலும், உண்மை நிலையை அவர் எடுத்துக் காட்டியதற்காக அவர் பாராட்டுதற்குரியவரே யாவார்.

மொழிவழி மாகாணம் அமைந்தாலும் வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட மலையாளிகளும் தமிழர்களும் ஒத்துழைப்பதற்கு அப்பொழுதும் இடமுண்டு எனக் கூறிக் கொள்ளுகிறோம்.

'ஒரே மாநிலமாக உத்தரப் பிரதேசம் இயங்கக்கூடாது'

'தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெரும் தீங்கிழைக்கும்'

பிரதமர் நேருவுக்கு டாக்டர் அம்பேத்கார் அறிவிப்பு

அவுரங்காபாத், நவ. 22—

"உத்தரப் பிரதேசம், பீகார், மகாராட்டிரம் போன்ற பெரிய மாகாணங்களை அமைப்பதால் மத்திய அரசாங்கத்துக்கு மாத்திரமின்றி, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கே இவை பெருந் தீங்கிழைக்கும்"

என்ற கருத்தை பிரதமர் நேருவிடம், முன்னாள் இந்திய சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கார் தெரிவித்துள்ளார். தந்தி மூலம் அனுப்பிய செய்தியில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

"மகாராட்டிரத்துடன் பம்பாய் நகரை இணைப்பதைத் தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பு பெரிதும் வரவேற்கும்; ஆனால், பம்பாய் நகரம் தனி மாநிலமாக இயங்கினாலும் பொருட்படுத்தப் போவதில்லை. இம்மாதிரியான பெரிய மாநிலங்களை அமைப்பதைத்தான் வெறுக்கிறேன்.

"உத்தரப் பிரதேசம், பீகார், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றும் மூன்று மாநிலகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்பது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பின் அவாவாகும்.

"தாழ்த்தப்பட்ட வகுப்பினரை மனிதர்களாகக் கருதாமலிருக்கும் மிக்கப் பெரும்பான்மை உள்ள மக்கள் வசிக்கும் மாநிலத்தில் அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு கிடைக்காது. ஆகையால், இச்சிக்கலைக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எவ்விதமான அரசியல் பாதுகாப்பும் இல்லாததன் காரணமாக, எந்தச் சமயத்திலும், வன்முறைச் செயலையும் அவர்கள் மேற்கொள்ளக் கூடும்.

ரூ. 61 கோடி செலவில் புதிய உருக்கு ஆலை!

தனிப்பட்ட முறையில் அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம்

ஜாம்ஷெட்பூரில், டாடா உருக்கு உற்பத்தியை விரிவாக்குவதற்கென ஒரு புதிய தொழிற்சாலையை, ரூ. 61.75 கோடியில் கட்டிமுடிக்க, அமெரிக்காவைச் சேர்ந்த கெய்சர் கார்ப்பரேஷன் நிறுவனம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதின்மூலம், இந்தியாவின் உருக்குத் தேவையை 45 சதவிகிதம் அதிகரிக்கச் செய்யலாம் என்றும், டாடா தொழிற்சாலையின் மொத்த உற்பத்தி சக்தி அளவை 13,00,000 டன்னிலிருந்து 20,00,000 டன்னாக உயர்த்தலாம் என்றும், அக்கம்பெனி நிர்வாகிகள் தெரிவித்திருக்கின்றனராம்.

புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் தொழிற்சாலையை அமைக்கும் எல்லா வேலைகளுக்கும், நிறுவனத்தின் எஞ்சினீயர்கள் பகுதியே முழுப்பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் என்றும், இத்தகு பெரிய அளவு அபிவிருத்தித் திட்ட வேலைகள், மேற்படி நிர்வாகத்தினரால், இதுவரை, அமெரிக்காவைத் தவிர பிற இடங்களில் மேற்கொள்ளப்பட்டதில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்சாலை நிர்மாணத்திற்கு 5 கோடி டாலர் பெறுமான இயந்திர சாதனங்கள் தேவைப்படுமென்றும், தொழிற்சாலை, $2\frac{1}{2}$ ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்றும் அக்கம்பெனியினர் கூறியிருக்கின்றனராம்.

விசால ஆந்திர அமைப்புக்கு தெலிங்கானா தலைவர்கள் மறுப்பு

பேச்சுவார்த்தைகள் ஒத்திவைப்பு

கர்நூல், நவ. 23—

விசால ஆந்திரம் அமைப்பது குறித்து, ஆந்திரா, தெலிங்கானா காங்கிரஸ் தலைவர்களிடை இன்று நடைபெறுவதாக இருந்த பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுவிட்டன என்று ஆந்திர முதலமைச்சர் கோபால ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளை ஒத்திவைப்பதென்ற முடிவை, காங்கிரஸ் தலைவர் தேபர் அறிவித்ததாகக்குறிப்பிட்ட கோபாலர், 'ஒத்திவைப்பிற்கான காரணம், தெலிங்கானா மாநிலத் தலைவர்கள் நரசிங்க ராவ், ரங்கா ரெட்டி ஆகியோர் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு மறுப்புத் தெரிவித்ததேயாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்கொண்டு நடவடிக்கைகள் அனைத்தையும் இனி, காங்கிரஸ் தலைமைப் பீடம்தான் மேற்கொள்ளவேண்டும் என்றும் கோபாலர் கூறியிருக்கிறார்.

என்ன காரணம்?

போபால், நவ. 22—

"இரண்டாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தின் மொத்தச் செலவை ரூ. 5,400 கோடியிலிருந்து ரூ 4,800 கோடிக்குக் குறைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது,"

என்று, மத்திய சர்க்கார் அமைச்சர் குல்சாரிலால் நந்தா கூறிவிட்டு மேலும் குறிப்பிட்டார் :—

"அவசியமோ, அல்லது தேவையோ இல்லாததால் இந்தக் குறைப்பு செய்ய வேண்டியிருக்கவில்லை. பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்க நாட்டில் கிடைக்கும் நிதி வசதிகளைக் கவனிக்கும்போது, மொத்தச் செலவில் ரூ. 600 கோடி குறைக்க வேண்டியது அவசியமாகிறது."

இந்தியாவுக்குக் கனடா உதவியின் மதிப்பு

ஐந்து ஆண்டுத் திட்டத்துக்காக கனடா சர்க்கார் அளிப்பதாக வாக்குறுதி செய்துள்ளதும், அளித்திருப்பதுமான மூலதன உதவியின் மொத்த மதிப்பு 770-இலட்சம் டாலர் அல்லது ரூ. 37 கோடி. இந்த உதவி, விற்பனைப் பொருள்கள் மூலமாகவும், திட்டங்களுக்குத் தேவைப்படும் சாதனங்கள் ரூபமாகவும் வழங்கப்பட்டிருக்கிறது.

மக்கள் சபையில் மீண்டும் 'ஜீப்' விவகாரம்!

முடிந்துபோன விஷயம் என்கிறார் பண்டித பந்த்!

"சர்க்கார் முடிவுகளுக்கு சபை உறுப்பினர்கள் இணக்கம் கொள்ளாவிட்டால், சர்க்கார்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, வாக்கெடுப்பின் மூலம் சர்க்காரை வெளியேற்றலாம்," என்று உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்புச் சட்ட மசோதாவைப் பிரரேபித்து அமைச்சர் பந்த் பேசிக்கொண்டிருக்கையில், இந்து மகா சபைத் தலைவர் என். சி சாட்டர்ஜி, சென்ற 1948-ல், இந்திய சர்க்கார் ஜீப் கார்கள் வாங்கியதில் ஏற்பட்ட இலஞ்ச ஊழல்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

"ஜீப்கார் ஊழல் குறித்து, பாராளுமன்றப் பொதுக் குழு, விசாரணை நடத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தும் கூட, அமைச்சர்கள், அந்த ஊழலை மறைக்கத் தங்களால் இயன்றவைகளைச் செய்து வருகின்றனர்; அமைச்சர்களாக இருக்கின்ற நீங்களே, நாட்டில் இலஞ்ச ஊழல்களை விருத்தி செய்து, அவற்றிற்கு ஆதரவு தருபவர்களாக இருக்கிறீர்கள்; இவ்வாறு நீங்கள் செய்வதால், 'பெரிய மனிதர்களே குற்றங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளும்போது, நம்மால் மட்டும் ஏன் முடியாது?' என்று குற்றவாளிகள் நினைக்கவும் ஏதுவாகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உடனே அமைச்சர் எழுந்து, முடிந்துபோன பிரச்சினையை மீண்டும் உறுப்பினர் கிளப்புகிறார் என்று குறிப்பிட்டுவிட்டு, மந்திரி சபை துணைக் குழு ஒன்றினால் ஜீப் கார் விஷயம் நன்றாக பரிசீலிக்கப்பட்டுவிட்டது என்றும், சர்க்கார் இருக்கும் வரையில், குற்றவாளிகள் தண்டப்படாதபடி பார்த்துக் கொள்ளும் என்றும் கூறியிருக்கிறார்.

இலங்கையில் மொழிச் சிக்கல்...!

ஆளும் கட்சியிலுள்ள சட்டசபை தமிழ் உறுப்பினர் வெளியேறுவர்?

கொழும்பு, நவ. 22—

சிங்கள மொழியை மட்டும் இலங்கையின் அரசாங்க மொழியாக்குவதென்று இலங்கை சர்க்கார் கட்சி தீர்மானித்திருக்குமானல், சட்டசபையில் பிரதமர் கொத்தலாவலையின் கட்சியிலுள்ள தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் அதிலிருந்து விலகிவிடுவதென முடிவு செய்திருப்பதாகத் தமிழ் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

'ஐக்கிய தேசியக் கட்சி' என்ற பெயரில், 90 உறுப்பினர்களுள்ள ஆளும் கட்சியில் 10 தமிழ் உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த சில நாட்களாகவே தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் மொழிப் பிரச்சினை பற்றி தீவிரமாக விவாதித்து வருகின்றனர்.

சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்குவதென்று சர்க்கார் கட்சி தீர்மானித்தால், இலங்கையிலுள்ள 15 இலட்சம் தமிழ் பேசும் மக்களுக்குத் தனித் தமிழ் மாகிலம் கோரி, தமிழ் உறுப்பினர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவர்; இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், சர்க்கார் கட்சியிலிருந்து அவர்கள் வெளியேறிவிடுவர்.

கண்டி மாநகரில் இலங்கை தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்

இலங்கை தி. மு கழகத்தின் பொதுக் குழுக் கூட்டம், நவம்பர் 12, 13-ந் தேதிகளில் கண்டி மாநகரில், சி. சி. பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இலங்கை முழுவதிலுமிருந்தும் கிளைக் கழகப் பிரதிநிதிகளும் பொதுக் குழு உறுப்பினர்களும் திரளாக வந்திருந்தனர்.

பொதுக் குழுவில் கலந்துகொள்ளும்பொருட்டு 12—11—55 மாலை இ தி மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் இரா. அதி. மணி, துணைப் பொதுச் செயலாளர் தோழர் அ. ம. அந்தோனிமுத்து, மற்றும் ஏராளமான பொதுக் குழு உறுப்பினர்களும், கொழும்பிலிருந்து புகைவண்டி மூலம் கண்டி மாநகருக்கு வந்து சேர்ந்தனர். கண்டி மாவட்ட சின்ன அந்தோனிமலை கிளைக் கழகத் தோழர்கள் கண்டி புகை வண்டி நிலையத்திற்குத் திரளாக வந்திருந்து பொதுச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் இருவரையும் மலர் மாலை அணிவித்து வரவேற்று, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

இரவு 9 மணிக்கு பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. துணைப் பொதுச் செயலாளர் தோழர் அ. ம. அந்தோனிமுத்து உறுப்பினர்களை வரவேற்றுப் பேசியபின், பொதுச் செயலாளர் தோழர் இரா. அதி. மணி, தலைமை தாங்கி ஆண்டறிக்கையை வாசித்து எதிர்காலப் பணி குறித்து விளக்கவுரை நிகழ்த்தினர். பொருளாளர் தோழர் பா. ச. கீதம் கழகத்தின் வரவு-செலவு கணக்கை ஒப்படைக்க, குழு ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

இ. தி. மு கழகத்திற்கு ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தும் பொருட்டு, சென்ற ஆண்டில் நியமிக்கப்பட்ட சட்டதிட்டக் குழுவின் செயலாளர் தோழர் அ. ம. அந்தோனிமுத்து, சட்டதிட்ட நகலை குழுவின் ஆய்விற்கு ஒப்படைத்து, அவை குறித்து விளக்கவுரை வழங்கினர். இரவு 3-30 மணி வரை சட்டதிட்டங்களை ஆய்ந்த பொதுக் குழு, ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 13—11—55 காலை 8 மணிக்கு கூடிற்று. பகல் உணவிற்காக ½ மணி நேரம் கழித்ததை தவிர தொடர்ச்சியாக மாலை 4½ மணிவரை சட்டதிட்டங்களை மிக நுணுக்கமாக ஆய்ந்தபின், சில திருத்தங்களுடன் ஒப்புக்கொண்டதோடு—சட்ட திட்டங்களை அச்சிட்டு வெளியிட ஒருமனதாக ஒப்பியது.

அடுத்து பிரச்சாரக் குழு செயலாளர் தோழர் டி. எம். பீர்முகமது கொடுத்த விலகல் கடிதம் ஒப்புக் கொள்ளப்பட்டது.

பின்னர், திருச்சி பேராசிரியர் திரு. இருதயராஜின் மறைவுக்கு இலங்கை தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

இலங்கையில், சிங்கள — தமிழ் மக்களிடம் இருந்துவரும் சாதீயக் கொடுமைகளையும், 'ரொடியா' என்ற ஒரு குறிப்பிட்ட சமூகத்தாரை, கல்வி—தொழில் வசதி பெற விடாது பிச்சையெடுத்தே வாழவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள சீர்கேடான முறையினையும், இந்த 'ரொடியா' வகுப்புப் பெண்களை, மேலாடையணியக் கூடாது என தடுத்திருக்கும் சமூகத் தடையால் ஒரு சிலர் இப்பெண்களை மேலாடையின்றிப் புகைப்படமெடுத்து 'ரொடியப் பெண்' என்ற பெயரில் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வரும் கயமைத்தனத்தையும் வன்மையாகக் கண்டித்தும், இந்தச் செய்கைகள் அனைத்தும் சட்ட விரோதமாக்கப்படுவதுடன், 'ரொடியா' சமூகத்தாருக்கு ஏனைய சமூகத்தாருக்குள்ள மனித உரிமைகள் யாவும் ஒருங்கே அளிக்கப்படவேண்டுமென்றும் அரசியலாரைக் கேட்டுக்கொண்டும், தேநீர் கடைகளில் விளம்பரப் பலகைகளில் சாதிப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளதையும் 'அருந்ததிய' சமூகத்தாருக்கு ஒட்டல் நுழைவு மறுக்கப்பட்டு, தகர டின்களில் வெளியில் வைத்து தேநீர் அருந்தச் செய்யும் போக்கினையும் கண்டப்பதுடன், இவைபோன்ற தேநீர் கடைகளின் மீது தகுந்தநடவக்கை எடுக்கவேண்டுமென்றும், வழங்கப்பட்ட 'லைசென்சு'களை ரத்து செய்யவேண்டுமென்றும் ஸ்தல ஸ்தாபனங்களைக் கேட்டுக்கொண்டும், தமிழும், சிங்களமும் இலங்கை ஆட்சி மொழிகளாக்கப்படவேண்டுமென்பதுடன், சமமொழிக் கொள்கைக்கான சட்டம் விரைவில் இயற்றப்படவேண்டுமென்று அர

(4-ம் பக்கம் பார்க்க)

'...தமிழகமே பொன்னுடை போர்த்திக்கொண்டது!'

தென்னிந்திய நடிகர் சங்கம் கலைவாணருக்குப் பொன்னுடை போர்த்திப் பெருமை எய்திய போது, போலிவுடன் கை கூப்பி வணக்கம் செலுத்தும் என். எஸ். கே. அவர்களுக்கு அன்ரோர் நாள், கலைவாணருக்குத் தரப்பட்ட வரவேற்பு ஒன்றில், அண்ணு அவர்கள் வழங்கிய அன்புரையை இன்று நாம் 'காணிக்கை'யாக்குகிறோம்.

'சட்டத்தின் கரங்களி'லிருந்து விடுபட்டு வெளிவந்தவுடன், கலை உலகம், என். எஸ். கிருஷ்ணன் அவர்களை வரவேற்றது. அண்ணு அவர்களும் அவ்வரவேற்பில் கலந்து கொண்டிருந்தார்.

வரவேற்புக்குப் பதிலளித்து கலைவாணர் பேசுகையில், தழுதழுத்த குரலுடன், '...தீர்ப்பு வழங்கிய அன்றைய இரவு முழுவதும் நான் தூங்கவேயில்லை; ஆனுல், கலை உலகம்....' என்று நெஞ்சம் குமுறிக் கூறினர்.

உடனே அண்ணு அவர்கள், கலங்கிய நிலையில் கலைவாணர் அவர்கள் கூறிய 'வார்த்தை'களை மறுத்து அன்புரை வழங்கினர்:—

"தீர்ப்பு வழங்கிய அன்றைய இரவு முழுவதும், தான் மட்டுமே தூங்கவில்லை என்று கலைவாணர் எண்ணுகிறார்; ஆனுல், சிறை மதிலுக்கு வெளியே, அவர் எண்ணிக் கொண்டிருப்பதுபோல் அன்றையத் தினம் நிலைமை இருக்கவில்லை; அன்றைய இரவு முழுவதும் தமிழ் நாடே தூங்கவில்லை' என்பதை, இன்று கலைவாணருக்கு நினைவுறுத்துகிறேன்" என்ருர்.

இன்று, தென்னிந்திய நடிகர் சங்கச் சார்பில் கலைவாணர் பொன்னுடை போர்த்திக் கொண்ட நிலை, 'தமிழகமே பொன்னுடை போர்த்திக்கொண்டது'. என்பதற்கு ஒப்பாகும் என்று குறிப்பிட்டுக் கூறுவதற்கு நாம் பெருமைப்படுகிறோம்—பெருமகிழ்வு எய்துகிறோம்—'நாட்டிற்கு அவர் ஆற்றும் தொண்டு நீடு நிலவுக' என்று மனமார வாழ்த்துகிறோம்.

'பாமர மக்களின் துன்பங்கள்தான் மறைந்து கிடக்கின்றன'

நினைவுச் சின்னங்கள் குறித்து குருஷ்சேவ்

"சென்ற காலத்தில் இருந்த மன்னர்கள் தங்களது செல்வத்தை, நினைவுச் சின்னங்கள் கட்டுவதற்காகச் செலவிட்டுக் கொண்டிருந்த நேரத்தில், மக்கள் பசியாலும், பட்டினியாலும் வாடிக் கிடந்தனர்; எனவே, தாஜ் மகால் போன்ற இந்த மகத்தான நினைவுச் சின்னங்களில் பாமர மக்களின் துன்பங்கள் அனைத்தும் மறைந்து கிடக்கின்றன. தாங்கள் புகழ் பெறுவதற்காக மன்னர்கள் இது போன்ற நினைவுச் சின்னங்களை எழுப்பியிருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் உருவாக்கித் தந்த பெருமை பாமர மக்களையே தான் சாரவேண்டும்; ஏனெனில், அவர்களது கடுமையான உழைப்பும், திறமையும்தான், இத்தகைய நினைவுச் சின்னங்களில் காணப்பெறும் கலைச் சிறப்புக்களுக்குக் காரணம்."

என்று, சோவியத் கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் நிகிதா குருஷ்சேவ், தாஜ்மகால், குதப்மினர் போன்ற புகழ் பெற்ற கட்டிடங்களைப் பார்வையிட்டு விட்டு, அவற்றைப் பற்றிய தம்முடைய கருத்துக்களை, ஆக்ராவில் நடைபெற்ற வரவேற்பு கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறர்.

மேலும் அவர், 'ஒரு நாடு, இயந்திரத் தொழில் துறையில் எப்போது தன்னிறைவு காண்கிறதோ, அன்றுதான் அந்த நாட்டுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்திருக்கும்' என்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

****

தலைமைக் கழகச் செய்தி

பொதுக் குழு உறுப்பினர் கவனிக்க

மாநில மாநாட்டின் வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணமாகிய ரூ. 10-ஐ இதுவரையில் செலுத்தாத பொதுக் குழு உறுப்பினர்கள் உடனடியாகச் செலுத்தும்படி மிக்க வருத்தத்தோடு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

கடமையைச் செய்ய மறந்திருக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் அவர்தம் கடமையை நிறைவேற்றி வைக்கும் வகையில் தக்க செயல்களை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம் செலுத்தாத பொதுக் குழு உறுப்பினர், பொதுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படாமலிருக்கக்கூடும்.

'அறிவகம்'
14-11-55.

—தி. மு. க. தலைமை நிலயம்

****

புனரமைப்புக் குழு சிபாரிசுகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

முதல் அமைச்சர், நிதி அமைச்சர் தாக்கப்பட்டனர்

'போலீஸ் வளையத்தை' ஊடுருவி மக்கள் சபைக்குள் புகுந்தனர்

இரு எம். எல். ஏ.-க்கள் உட்பட பத்து பேர் கைது

ரீவா, நவ. 23—

விந்தியப் பிரதேச சட்டசபைக் கூட்டத்தில், மாநில புனரமைப்புக் குழுவினரின் சிபாரிசுகள் குறித்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், சுமார் 100 பேரடங்கிய ஆர்ப்பாட்டக் கூட்டத்தினர், சபைக்கு வெளியேயும், உள்ளேயும் நிறுத்தப்பட்டிருந்த பலத்த போலீஸ் காவல்களையும் மீறி, சபைக்குள் புகுந்து, நிதி அமைச்சர் மகேந்திர குமார் மானவ் என்பாரைத் தாக்கியும், முதலமைச்சர் பண்டித சம்புநாத் சுக்லாமீது ஒரு காகிதக் கட்டை வீசியும் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியிருக்கின்றனர்.

அமைச்சர்களை மட்டுமல்லாமல், சபையினுள் இருந்த மற்றோர் மீதும் கற்களையும், பழஞ் செருப்புகளையும் அவர்கள் வீசியெறிந்திருக்கின்றனர்.

'விந்தியப் பிரதேசம், மத்தியப் பிரதேசத்துடன் இணைக்கப்படக் கூடாது' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குரல் எழுப்பியதுடன், 'உடனே அமைச்சரவை இராஜிநாமா செய்ய வேண்டும்' என்றும் கூச்சலிட்டிருக்கின்றனர்.

முதலமைச்சர் ஆர்ப்பாட்டக்காரர்களை சமாதானப்படுத்துவதில் எவ்வளவு முயன்றும் தோல்வியே தான் பெற்ருர் என்றும், ஆவேசத்துடன் கிளர்ந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அவர், தமது பதவியை விட்டு விலக வேண்டும் என்றும் பெருங்கூச்சலிட்டனராம்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நடுவே அகப்பட்டுக்கொண்ட முதலமைச்சரை சில போலீஸ் அதிகாரிகள் மிகக் கஷ்டப்பட்டு விடுவித்து, அவரது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதனிடையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் சபாநாயகர் மீதும் கல் வீசினர் என்றும், நல்லவேளையாக அக்கற்கள் அவரது மேசையின் மீதே விழுந்தன என்றும் கூறப்படுகிறது.

கல்வீச்சுக்களையும், ஆர்ப்பாட்டங்களையும் கண்ட சபாநாயகர் உடனே சபை நடவடிக்கைகளை நிறுத்திவைத்திருக்கிருர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் நேரடி தாக்குதலால் நிதி அமைச்சர் அப்படியே தமது இருப்பிடத்தில் சாய்ந்து, தலையைக் குனிந்து கொண்டு, 'என்னை இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் அடியுங்கள்' என்று மெதுவாகக் கூறிக் கொண்டிருந்தாராம். பரிதாபத்திற்குரிய இந்த நிலையின்போது போலீசார் விரைந்தோடிச் சென்று அவரையும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கைகளினின்றும் விடுவித்து, அவரது அறைக்கு அழைத்துச் சென்றனராம்.

நிதி அமைச்சரை ஆர்ப்பாட்டக்காரர்கள் வசமிருந்து விடுவிப்பதற்காகப் பெருமுயர்சி எடுத்துக்கொண்ட உதவி சபாநாயகர், நீதி இலாகா மந்திரி ஆகியோரும் தாக்கப்பட்டனராம்.

இன்று காலையிலிருந்தே கூட்டம் கூட்டமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டசபைக்கு முன்னர் கூடினர் என்றும், சிறிது சிறிதாக அவர்கள் கட்டிடத்தின் உட்புற வாயிலைக் கடந்துசெல்ல முற்பட்டனர் என்றும், அதனைத் தடுக்கப் போலீசார் மேற்கொண்ட பெருமுயர்சிகள் அனைத்தும் வீணாயின என்றும் கூறப்படுகிறது.

தடுத்து நிறுத்த எத்தனித்தப் போலீசாரையும் தாக்கிவிட்டு, ஆர்ப்பாட்டக்காரர்கள், சபைக் கட்டடத்திற்குள் நுழைந்திருக்கின்றனர். இந்தச் சமயத்தில், போலீசாருக்கும் — ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே கைகலப்புகள் நடைபெற்றன என்றும், இதன் விளைவாக சில போலீசாரும், ஆர்ப்பாட்டக்காரர்களும் காயம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளையொட்டி, பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

இன்று முழுவதும், நகரில் உள்ள கடைகள், மார்க்கெட்டுகள் அனைத்தும் பூரண கடையடைப்புச் செய்தன என்றும், நகரிலுள்ள ஒரு கல்லூரி மாணவர்கள் அனைவரும் கல்லூரிக்குச் செல்லவில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் தூண்டுகோலாக இருந்தவர்கள், சோஷலிஸ்டு, ம. சோ., ராமராஜ்ய பரிஷத், மஸ்தூர் சபா போன்ற பலதரப்பட்ட அரசியல் கட்சிகள்தான் என்றும் பத்திரிகை குறிப்பொன்று கூறுகிறது.

'காங்கிரஸ் சர்க்கார் மீது நம்பிக்கையில்லை'

'அமைச்சர்களே விலகுங்கள்'

சட்டசபையில் வெளியேற்றம்

குவாலியர், நவ. 23—

மாநில புனரமைப்புக் குழுவினரின் சிபாரிசுப்படி மத்திய பாரத் மாநிலம், மத்திய பிரதேசத்துடன் இணைக்கப்படக் கூடாது என்று கூறி, மத்திய பாரத் மாநில சட்டசபையிலுள்ள இந்துமகாசபை உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்திருக்கின்றனர்.

வெளிநடப்புச் செய்வதற்குமுன் அந்த பத்து உறுப்பினர்களும், காங்கிரஸ் சர்க்கார் மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை என்றும், அமைச்சர்கள் இராஜிநாமா செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சபைக் கூட்டத்தில், மாநிலக் குழுவினரின் அறிக்கைபற்றி விவாதம் நடைபெற்றபோது இந்துமகா சபை தலைவர் நிரஞ்சன் வர்மா, 'மத்திய பிரதேச மாநிலத்தை உருவாக்குவதென்ற மாநில குழுவினரின் சிபாரிசுகள் பற்றிய பிரச்சினையில் அமைச்சர்கள் நிலையற்ற கருத்துக்கொண்டவர்களாக இருக்கின்றனர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வெளி நடப்புச் செய்த உறுப்பினர்கள் சுமார் 15 நிமிடங்கள் கழித்து சபை நடவடிக்கைகளில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

நிரஞ்சன்வர்மா தமது உரையின் போது, கடந்த எட்டாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சி பற்றிக் கூறுகையில் 'அநியாய ஆட்சிமுறை' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சமூதாய நலத் திட்ட நிர்வாகத்தினருக்குத் தேவைப்படும் விவசாயப் பட்டதாரிகளின் எண்ணிக்கை 4,928 ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பட்டதாரிகள்

சென்னையில் 14,500..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

தொழிலாளர்கள் அனைவரும் ஒற்றுமை உணர்ச்சியுடனும். அமைதியாகவும் இருக்கின்றனர்.

★

தலைவர் - அமைச்சர் சந்திப்பு

நேற்று மாலை, சென்னை தொழிலாளர் யூனியன் தலைவர் திரு எஸ் சி. சி. அந்தோணி எம் எல் ஏ அவர்களும், தொழில் அமைச்சர் பக்தவத்சலமும் சர்க்கார் காரியாலயத்தில் சந்தித்து, ஆலைத் தொழிலாளர் நிலை குறித்து விவாதித்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

பொதுக்கூட்ட முடிவு:

நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், இந்தத் தகராறில் நடுநிலையாளராக தொழில் இலாகா செயலாளர் சி. ஜி. ரெட்டி என்பாரை நியமிக்க அமைச்சர் பக்தவத்சலம் யோசனை கூறியிருப்பதாலும், ஆனால், ஆலை நிர்வாகத்தினரோ, திரு சி. ஜி. ரெட்டி, நடுநிலையாளராக இருந்தால் மட்டும்தான் சமரச நடவடிக்கைகளுக்கு ஒப்புக்கொள்ள முடியும் என்ற விசித்திரமான போக்கில் சென்றுகொண்டிருப்பதாலும், அத்துடன், இத்தகராறை சென்னை தொழில் டிரிபியூனலுக்கு விடுவதற்கு பதிலாக புதிதாக நியமிக்கப்படும் ஒரு தொழில் டிரிபியூனலுக்கு விடவேண்டுமென்று நிர்வாகிகள் கூறியிருப்பதாலும், அதற்குத் தாங்கள் உடன்பட முடியாது என்ற காரணத்தால், தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

மேலும், ஆலை நிர்வாகிகளுடன் நேரடியான பேச்சுவார்த்தைகள் நடத்தி, இத்தகராறில் நியாயமான தீர்வு காணவோ, அல்லது இருதரப்பினரும் ஒப்புக்கொள்ளும், ஒரு நடுநிலையாளரின் முயற்சி மூலம் உடன்பாடொன்று காண்பதற்கோ வேண்டிய சாத்தியக் கூறுபாடுகளை ஆராய்வதற்கு, யூனியன் நிர்வாகிகளுக்கு அதிகாரம் அளித்தும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகராறில், சம்பந்தப்பட்ட கட்சிகளின் விருப்பத்திற்கு எதிராக, இதனை எந்த 'டிரிபியூனலு'க்கும், தீர்ப்பு வழங்கப்படுவதற்காக விட்டுவிடவேண்டாம் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

★

இன்று பொதுகூட்டம்

இந்த வேலை நிறுத்தத்தையொட்டி, இன்று மாலை 6 மணிக்கு சென்னை கான்ரன்ஸ்மித் நகர் மைதானத்தில் திரு. எஸ். சி சி. அந்தோணி எம் எல்.ஏ., அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

தோழர்கள் பக்கிரிசாமி எம் எல் ஏ, கே பி. சாமுண்டீசுவரன் எம் சி, சி. கே. நாராயணன் எம் சி, ஆகியோரும், மற்றும் பலரும் பேசுவர்.

சென்னை மாணவர் மன்ற குழந்தைகளுக்கான போட்டிகள்

3, 4—12—55-ந் தேதிகளில், வழக்கம்போல், சென்னை மாணவர் மன்றச் சார்பில், ஆரம்பப் பள்ளி வகுப்புக் குழந்தைகளுக்கு ஆடல், பாடல், கதை சொல்லுதல், பேச்சு முதலிய போட்டிகள் சென்னையில் நான்கு இடங்களில் நடைபெறும். மேலும் விவரம் வேண்டுவோர், 'எண் 17, இரத்தின முதலி தெரு, சென்னை-1' என்ற முகவரிக்கு நேரிலோ, கடிதத்தின் மூலமோ அறிந்துகொள்ளலாம்.

ஆந்திரர் கோரிக்கை விரிவடைகிறது!

சென்னை மாநிலத்திலுள்ள செங்கற்பட்டு, வடஆற்காடு, சேலம் மாவட்டங்களிலுள்ள தெலுங்கு பேசும் பகுதிகளையும், மத்திய பிரதேசத்திலுள்ள சந்தா, பஸ்தார் ஆகிய ஆந்திர மொழி பேசப்படும் பகுதிகளையும், ஒரிசாவிலுள்ள பர்லாகிமிடியைச் சேர்ந்த பேர்காம் பூரையும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்கவேண்டும் என்று கோருகிற தீர்மானம் ஒன்றினை, ஆந்திர சர்க்கார், வருகிற 25-ந் தேதி நடைபெற இருக்கும் சட்டசபைக் கூட்டத்தில், மாநில குழுவினரின் அறிக்கை குறித்த விவாதத்தின் போது பிரரேபிப்பது என்று இறுதி முடிவுக்கு வந்துள்ளனராம்.

இந்த இறுதி முடிவு, ஆந்திர மாநில காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினர்கள், சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர்கள், ஆந்திர பிரதேச காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆகியோரடங்கிய கூட்டம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்டது என்று முதலமைச்சர் கோபாலர் தெரிவித்திருக்கிருர்.

விசால ஆந்திர அமைப்புக்கான பேச்சு வார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டதற்குக் கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கோலார், சித்தலதுர்கம், தும்கூர், பெங்களூர் ஆகிய மைசூரைச் சேர்ந்த மாவட்டங்களான பெரும்பான்மை தெலுங்கு மொழி பேசப்படும் பகுதிகள் ஆந்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

கண்டி மாநகரில்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கத்தை கேட்டுக்கொண்டும், பௌத்த பிட்சுக்கள் அரசியலில் தலையிட்டு நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவித்து வருவதைக் கண்டிப்பதுடன், இதை உடனடியாகத் தடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், கொழும்பில் அண்மையில் நடந்த சவ மொழிக் கொள்கை மாநாட்டின்போது ஏற்பட்ட கொந்தளிப்பால் தமிழ் மக்களுடைய கடைகள் சூறையாடப்பட்டதை கண்டிப்பதோடு, சம்பந்தப்பட்ட கடைகளுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், இலங்கையை, ஐ நா. நிறுவனத்தின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஐ நா. நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டும், இ தி மு. கழகத்தின் முதலாவது மாநாட்டை அடுத்த மார்ச்சு திங்களில் நடத்துவதெனவும், மொழிப் பிரச்சினை குறித்துத் தனி மாநாடொன்றை கூட்டவும், இ. தி. மு. கழகச் சார்பில் ஓர் தொழிற் சங்கத்தை நிறுவவுமான நடவடிக்கை எடுக்க, பொதுச் செயலாளருக்கு முழு உரிமை அளித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★

பொதுக்கூட்டம்

12, 13—11—55-ந் தேதிகளில் கண்டி சி. சி. பாடசாலையில் கூடிய இ தி மு. க. பொதுக் குழு கூட்டத்திற்கு வந்திருந்த இ. தி. மு. க. பொதுச் செயலாளர், பொதுக் குழு உறுப்பினர் ஆகியோருக்கு வரவேற்பு அளிக்குமுகத்தான், 13—11—55 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு, கண்டி நகர மண்டபத்தில், கண்டி மாவட்ட மாயாவை, சின்ன அந்தோனிமலை கிளைகளின் சார்பில் வரவேற்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாயாவை கிளைக் கழகச் செயலாளர் தோழர் கி. து. மதியழகன் தலைமை வகித்தார். தோழர் ப. சிவம் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

இ. தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் இரா. அதி. மணி, பொதுக் குழு உறுப்பினர்கள் தோழர்கள் சு. கா. சுந்தரராசன், வி. எஸ் முருகன், பா. ச. கீதம், டி. இராசன், மு. வே. பெ. சாமி, மணவை தம்பி ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

அண்ணுதுரை, நெடுஞ்செழியன் புதுவை வருகை

★

27—11—55 மாலை 6 மணிக்கு புதுவை, ஒதியஞ்சாலைத் திடலில், புதுவை தி. மு. கழகச் சார்பில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில், தோழர் சி. என். அண்ணுதுரை, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்படும்.

28—11—55 காலை 9 மணிக்கு புதுவை வட்டத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகளை, அண்ணு அவர்களும், பொதுச் செயலாளர் அவர்களும் பார்வையிடுவார்கள்.

கழகக் கூட்டங்கள்

★

திமிரி (வ. ஆ. மாவட்டம்)
தேரடி மைதானத்தில்
26—11—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : தி. கு. நாகநாதன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஏ. எல். சி. கிருட்டிணசாமி

★

ஒண்டிப்புதூர்
பாண்டியனூர் திடலில்
(பாடசாலை பின்புறம்)
26—11—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

26—11—55 மாலை 6 30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 28, முத்து கிருஷ்ணன் தெருவில், சென்னை 8-வது வட்ட தி மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, கழக வரவு-செலவு ஒப்படைத்தல், மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

திருக்குறள் வகுப்பு

26—11—55 பிற்பகல் 2-30 மணிக்கு, தாய்மார் கழகச் சார்பில், சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்து கிருஷ்ணன் தெருவில் நடைபெறும். 'தெரிந்து தெளிதல்' என்பது குறித்து, திருவாளர்கள் மயிலை சிவமுத்து, செந்தில்வேல், திருமதி சூடாமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

சென்னை--சிந்தாதிரிப்பேட்டை, எண் 126, சாமிநாய்க்கன் தெரு, கலைக் கதிர் கழகத்தில் சொற்பயிற்சிக் கூட்டம் ஆரம்பமாகும். தோழர் எஸ். எஸ். தென்னரசு வ. உ. சி. படத்தைத் திறந்து வைத்து பேசுவார். 'கப்பலோட்டிய தமிழன்' எனும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

(தேதி குறிப்பிடப்படவில்லை)

* * *

25—11—55 மாலை 6-30 மணிக்கு, சென்னை-முத்தியாலுப் பேட்டை, முத்தமிழ் மன்ற பணிமனையில், தோழர் என். இராமதாசன் தலைமையில் நடைபெறும். 'உலக உத்தமர்கள்' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.